1979 மார்ச் 10]

உணவு விடுதிகளில் தரக் கட்டுப்பாடு.

* வினா எண் 320— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மத்திய அரசாங்கத்திடமிருந்து உணவு விடுதிகள், சிற்றுண்டி விடுதிகளில் உணவு வகைகளை சோதித்து எடை நிர்ணயம் செய்வது குறித்து உத்திரவுகள் ஏதேனும் தமிழக அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) & (ஆ) : நிலைமை அரசின் ஆய்வில் உள்ளது.

மீன் விற்பனை நிலையங்கள்.

* வினா எண். 321— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மண்டபம் பகுதியில் கிடைக்கும் உணவுக்கான மீன்களை விற்பனை செய்ய மதுரை போன்ற நகரங்களில் விற்பனைக் கூடங்கள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மதுரை, விருதுநகர், சிவகாசி இம்மூன்று இடங்களிலும் மீன் விற்பனை நிலையங்கள் திறக்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியில் கிடைக்கின்ற மீன்களை வைத்து கருவாடு தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான யோசனை ஏதாவது அரசு தரப்பில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட யோசனை எதுவும் அரசு தரப்பில் தற்போதைக்கு இல்லை.

[1979 மார்ச் 10

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, மீன்கள் விற்பனை செய்கின்ற விற்பனைக் கூடங்கள் அமைப்பதற்கான திட்டம் ஏதாவது திருச்செந்தூருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் கட்டமாக கடலோரப் பகுதிகளாக இருக்கின்ற எல்லா மாவட்டங்களிலும் இப்பேர்ப்பட்ட விற்பனை நிலையங்கள் அமைக்க வேண்டும் என்ற ஆலோசனை அரசினிடத்தில் இருந்து வருகிறது. துரிதமாக இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் எல்லாம் கேரளாவுக்கு பச்சையாக வாங்கிச்சென்று விடுகிறார்கள். ஆகவே இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் போதுமான அளவுக்கு மீன்கள் கிடைப்பதில்லை. ஆகவே இதை தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் இந்த நிலமையில்லை. தமிழகத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் எல்லாம் கிடைக்கின்ற இறால் மீன்களை அதாவது ப்ரான்ஸ் அண்ட் லாப்ஸ்டர்ஸ் இந்த இரண்டு வகை மீன்களையும் கேரளாவிலுள்ள ஏற்றுமதியாளர்கள் வாங்கிச் செல்வது உண்மை தான். மற்ற மீன்களை அவர்கள் வாங்கிச் செல்வதில்லை. இப்படி வாங்கிச் செல்லப்படுகின்ற ப்ரான்ஸ் அண்ட் லாப்ஸ்டர்ஸ் இந்த வகை மீன்கள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இங்கு இருந்து வாங்கிச் செல்லுகின்ற கேரள மாநிலத்திலுள்ள தொழிலதிபர்கள் அவற்றை பதப்படுத்தி அனுப்புகின்றார்கள். இதே போன்று தமிழ்நாட்டிலும் இவற்றை பதனிடும் நிலையங்களும் இயங்கிவருகின்றன. தமிழ்நாடு அரசே இந்த ப்ரான்ஸ் அண்ட் லாப்ஸ்டர்ஸ் வகை மீன்களை வாங்கிப் பதப்படுத்தி அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாமா என்ற ஆலோசனையும் இப்போது இருந்து வருகிறது.

திரு. சி. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளிலுள்ள மீன்களை எல்லாம் கிராமப்புறங்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னார்கள் ? அப்படி இப்போது கிராமப்புறங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா? இல்லையென்றால் எப்போது செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 10]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படவிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியிலுள்ள மீன்களை வாங்கிப் பதப்படுத்துவதற்கு வேண்டிய குளிர் பதன நிலையங்கள் இப்போது இருக்கின்றன. ஆனால் அவைகளை அரசினிடமிருந்து தனியார்கள் வாடகை முறையில் உபயோகித்துக் கொண்டு அவற்றின் மூலம் மீன்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக் கிறார்கள். ஆகவே இந்தப் ப்ரான்ஸ் போன்ற மீன் வகைகளை அரசாங்கமே இங்கு வாங்கி குளிர்ப்பதன நிலையம் மூலம் பதப் படுத்தி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிக்கலான பிரச்சினை. உடனடி யாக இதில் தலையிடுவதால் சில நேரங்களில் கஷ்டங்களை விளைவிக்கும். ஆகவே இதைப்பற்றி தீர்க்கமாக ஆலோசித்து மிகுந்த எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில், நடவடிக்கை எடுத்துக்கொள்ள மீன் வளர்ச்சிக் கழகமே இதை ஏற்றுக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியிலே உள்ள கடலோரத்திலே எத்தனைவகையான மீன்கள் இருக்கின்றன? எந்த வகையான மீன் சாப்பிடுவதற்கு ருசியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியிலே ஏராள மான வகையான மீன்கள் இன்றையதினம் கிடைத்து வருகின்றது. எத்தனைவகையான மீன்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எந்தவகையான மீன்கள் சாப்பிடுவதற்கு ருசியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். எல்லாவகையான மீன்களுமே, அந்தக் கடலோரப் பகுதியிலே கிடைப்பவை அதிக ருசியாக இருக்கின்றன. அது மாத்திரமல்ல. அதிலே ஏராளமான புரதச் சத்துக்கள் இருக்கின்றன. ஆகவே தான் மேற்கு வங்காள மாநிலத்திலே மீன் போன்றவை சைவ உணவாகக் கருதப்படுகின்றது.